10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 128 செவ்வாய்க்கிழமை செப்ரெம்பர் 26 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# சிறுவனின் கையை முறித்த கொடூரத் தம்பதியர் கைது

## பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் 7 வயதுச்சிறுவனின் கையை, அடித்து முறித்த சிறிய தந்தையையும், சம்பவத்தை வேடிக்கை பார்த்த தாயையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறையில் இடம்பெற்ற குறித்த தாக்குதலில் சிறிய தந்தையால் துன்புறுத்தப்பட்ட சிறுவன் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று

06





# வித்யா வழக்கு நாளை தீர்ப்பு

புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை வழக்கை விசாரணைக்கு உட்படுத்திய ட்ரயல்-அட்பார் நீதிபதிகள் குழு நாளை தமது தீர்ப்பை அறிவிக்கவுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்களின் தொகுப்புரை மற்றும் எதிர்த் தரப்பின் தொகுப்புரை என்பன ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தன.

இரு தரப்பு தொகுப்புரைகளும் முன்வைக்கப்பட்ட பின்னர் தீர்ப்பு

06



# திலீபனுக்கு காவடி

## கைதடி இளைஞனின் அஞ்சலி

தியாக தீபம் திலீபனின் நினைவாக யாழ்ப்பாணம் கைதடிப் பிள்ளையார் கோவிலில் இருந்து இளைஞன் ஒருவர் காவடி எடுத்துள்ளார். குறித்த காவடி இன்று காலை கைதடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் திலீபனின் நினைவிடம் அமைந்துள்ள பகுதியில் நிறைவு பெற்றது.

தமிழ் மக்களின் உன்னதமான சுதந்திர வாழ்வுக்காக சாகும் வரை

06

## தியாகதீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல்

# உணர்வுடன் திரண்டு மக்கள் அஞ்சலி





இந்திய–இலங்கை அரசுகளிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து, உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து உயிர்நீத்த தியாகதீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று நல்லூரில் இடம்பெற்றது. நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் 12 நாட்கள் உண்ணா நோன்பிருந்த தியாகதீபம் திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் நாள் காலை 10.48 மணியளவில் வீரச்சாவைத் தழுவினார். திலீபன் வீரச்சாவடைவடைந்த நல்லூர் ஆலய வடக்கு வீதியில், காலை 10.48 மணியளவில் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது. அதையடுத்து, நல்லூர் ஆலயப் பின்வீதியில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில், ஈகச் சுடர் ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. இந்த

06



# தேர்தல் திருத்தச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது

நிறைவேற்றப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணாகவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி. சில்வா தெரிவிக்கையில்,

சுயாதீனமாக இயங்க வேண்டிய நிறுவனங்களாக சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றம் ஆகியன செயற்பட வேண்டும் எனவும் ஒரு சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இருக்கும் பொழுது, மாகாண சபைகள் தேர்தல் திருத்தச்

06

# ரோஹிங்கியா முஸ்லிம்கள் 30 பேர் கொழும்பில் கைது

மியன்மார் ரோஹிங்கியா முஸ்லிம்கள் 30 பேர் கொழும்பில் இன்று கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - கல்கிஸை நகரிலுள்ள விடுதி ஒன்றில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் தங்கியிருப்பதாகவும் அவர்களை நாடுகடத்தும்படியும் பிக்குகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயற்சித்தனர்.

குறித்த ரோஹிங்கியா முஸ்லிம்கள் இந்தியாவிலிருந்து படகின் மூலம் வந்தபோது காங்கேசன்துறையில் வைத்து கைது செய்யப்பட்டு குடிவரவு, குடியகழ்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் ஐ.நா. அகதிகள்

06

# இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம்



இந்திய இராணுவ உயர் கட்டளைக் கற்கை நெறி அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

எயர் கொமடோர் சுரேஸ் ஹொல்லன்னாவர் தலைமையிலான இந்தக் குழுவில் இந்தியாவின் முப்படை அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழுவினர் நேற்று இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவைச் சந்தித்து பேச்சு நடத்தினர். அத்துடன்,

06

# மாகாணத் தேர்தலில் பல்லினத் தொகுதிகள்

மாகாண சபைத் தேர்தலுக்குத் தேவையான எல்லை நிர்ணயத்தின் போது, ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் பகுதிகளை பல்லினத் தொகுதியாக மாற்றுவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒரு தொகுதியில் இரு இனத்தவர்கள் வாழ்வார்களாயின், அந்தத் தொகுதியிலிருந்து இருவரைத் தெரிவு செய்ய முடியும் எனக் கூறப்படுகின்றது. (உ)

# கிழக்குப் பல்கலை கற்றல் ஆரம்பம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களினதும் முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் செவ்வாய்கிழமை ஆரம்பமாகும் எனக் கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏ.எல்.ஜௌபர் ஸாதிக் தெரிவித்துள்ளார்.

விடுதி வசதிகளுக்குத் தகுதியான அனைத்து மாணவர்களும் எதிர்வரும் திங்கட்கிழமை 6 மணிக்கு முன்னர் தத்தமது விடுதிகளுக்குச் சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கு விடுதி வசதி ஏற்படுத்தித் தருமாறு கோரி ஒகஸ்ட் 08ஆம் திகதி முதல் வந்தாறுமூலை வளாக நிருவாக கட்டடத்தை முற்றுகையிட்டுச் சாத்வீக போராட்டத்திலீடுபட்டனர். இதன்காரணமாகப் பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதையடுத்து, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேரவை நிலைமை தொடர்பாக ஆராய்ந்து ஒகஸ்ட் 17 ஆம் திகதி முதல் திருகோணமலை வளாகம் தவிர்ந்த வந்தாறுமூலை வளாகம் மற்றும் மட்டக்களப்பு சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் ஆகியவற்றை மூடுவதற்குத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# மகிந்தவின் மைத்துனரைத் தாக்கிய வழக்கில் 15 பேரும் விடுதலை

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மைத்துனர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த, 15 பேரையும் இராமேஸ்வரம் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது என்று தமிழகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மைத்துனரான நடேசன், கடந்த 2012 ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதியன்று, பூஜை செய்வதற்காக, இராமேஸ்வரம் சென்றிருந்தார். இராமேஸ்வரம் நடுத்தெருவிலுள்ள புரோகிதர் ஒருவரின் வீட்டில் பூஜை செய்து விட்டு வெளியே வந்தபோது, நடேசனை சிலர் தாக்கி, அவர் மீது செருப்பையும் வீசினர்.

இதனையடுத்து இராமேஸ்வரம் பொலிஸார், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த 15 பேரைக் கைது செய்தனர். இராமேஸ்வரம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஐந்தரை ஆண்டுகளாக, நடந்த இந்த வழக்கில், 15 பேரையும் விடுதலை செய்யுமாறு நீதிபதி பிரபாகரன் நேற்று உத்தரவிட்டார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பாடசாலை வைரவிழா

தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வைரவிழா நாளை நடைபெறவுள்ளது. மாலை 4.30 மணிக்குப் பாடசாலை அதிபர் ஐ.விஜயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்குப் பிரதம அதிதிகளாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ்.இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்அடைக்கலநாதனும் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் ஆர்.இரவீந்திரன், வடமாகாணம் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், மன்னார் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுகந்தி செபஸ்ரியன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# ஆட்சியை ஆளுநரிடம் கையளிப்பதில் அதிருப்தி!

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் ஆளுநரிடம் முழுமையாகக் கையளிக்கப்படுவது தொடர்பில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியடைவதாக, அந்தக்கட்சியின் பொதுச் செயலாளரும் கல்முனை மாநகர முன்னாள் முதல்வருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்த மாதத்துடன் ஆட்சிக்காலம் நிறைவடைந்து கலைகின்ற கிழக்கு மாகாண சபைக்கு, உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே, எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும். எனினும், மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதனால், புதிய முறையில் தேர்தலை நடத்தும் பொருட்டு தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பிரதமர் கூறியிருப்பது போன்று மார்ச் மாதம் தேர்தலை நடத்துவதென்றால் மாகாண சபைத் தேர்தலுக்கான தொகுதிகளை வரையறுப்பதற்கான எல்லை நிர்ணய பணிகள் கால தாமதப்படுத்தப்படாமல் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும். இது விடயத்தில் அரசாங்கம் பொறுப்புணர்வுடன் நேர்மையாக செயற்பட முன்வர வேண்டும் – என்று கூறினார். (உ)

# திருடப்போன மகிந்த மது அருந்தித் தூக்கம்

## வடிவேலு பாணியில் கைது

ஹொரவ்பொத்தானை நகரத்திலுள்ள மதுபானசாலையொன்றின் கூரையை உடைத்து உள்ளே சென்று, பியர் அருந்தி விட்டு வெறியில் வெளியே செல்ல முடியாமல் உள்ளே உறங்கிக்கொண்டிருந்த நபரொருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாக, ஹொரவ்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் ஹொரவ்பொத்தானை - சமகிகம பகுதியைச் சேர்ந்த மகிந்த திலகரெட்ன (40 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். ஹொரவ்பொத்தானை நகரத்திலுள்ள பியர் ஹவுஸ் கூரையைச் சந்தேகநபர், ஞாயிற்றுக்கிழமை இரவு உடைத்துக்கொண்டு, கீழே இறங்கியுள்ளார். அங்கு, இலாச்சியில் இருந்த 2,300 ரூபா பணத்தை எடுத்து, தன்னுடைய பொக்கெட்டில் வைத்துக்கொண்ட அந்த நபர், அங்கு அமர்ந்து, பியர்களைக் குடித்துள்ளார். போதை தலைக்கேறவே அவர் கடைக்குள்ளேயே வெறியில் உறங்கிவிட்டார். விடிந்தது தெரியாமலே அவர், உறங்கிக்கொண்டிருந்தார். இந்த நிலையில், மதுபானசாலையின் உரிமையாளர், நேற்றுக்காலை, மதுபானசாலையைத் திறந்து பார்த்த வேளை நபரொருவர் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டுள்ளார். இதனையடுத்துக் கதவை இழுத்து மூடிய அவர், பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார். விரைந்து செயற்பட்ட பொலிஸார், அந்த நபரைக் கைதுசெய்தனர். (உ)

# கிழக்கு உறுப்பினர் முன்மாதிரி



கிழக்கு மாகாண சபை கலைக்கப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னரே, தம்மிடமுள்ள அரசுடைமைகளைத் திருப்பி ஒப்படைப்பதில், அந்த மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் சிறந்த முன்மாதிரியைக் காட்டியுள்ளதாக, தவிசாளர் சந்திரதாஸ கலப்பத்தி பாராட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம், எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் 85ஆவதும் இறுதியுமான அமர்வு கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சந்திரதாஸ கலப்பத்தி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது சபை நடவடிக்கைகளில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் தனக்கென மாகாண சபையால்,செலவு செய்யப்பட்ட தொகை அடங்கலாக 67,428.40 ரூபாவுக்கான காசோலை, மற்றும் தனது அலுவலக நடவடிக்கைகளுக்கென வழங்கி வைக்கப்பட்ட கடிதத் தலைப்பு காகிதாதிகள், பைல் அட்டைகள், கடித உறைகள், காகிதங்கள் உள்ளிட்ட எஞ்சிய அனைத்து அலுவலகப் பொருட்களையும் கிழக்கு மாகாண சபையின் பேரவைச்செயலாளர் எம்.சீ.எம். செரீப் முன்னிலையில் கிழக்கு மாகாண சபையின் தவிசாளரிடம் கையளித்தார். (உ)

# மழலைகளின் விளையாட்டு விழா





வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா - மன்னார் மாவட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மழலைகளின் விளையாட்டு விழா நேற்று மாலை நடைபெற்றது. வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், கலாசார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தலைமையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவில் மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகள், உடற்பயிற்சி, கயிறு இழுத்தல், இசையும் அசைவும் போன்ற பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றதுடன், மழலைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன், கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி.நடராஜ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (உ)



## நாடாளுமன்றத்தை கலைக்கவுள்ள பிரதமர் அபே

ஜப்பானிய நாடாளுமன்றத்தின் கீழவையைப் பிரதமர் ஷின்ஸோ அபே , வியாழக்கிழமையன்று நாடாளுமன்றத்தைக் கலைக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக , மக்களின் ஆதரவைப் பெருமளவில் இழந்து வந்த பிரதமர் அபே, அடுத்த தேர்தலில் தோல்வியைச் சந்திக்கலாமென அச்சம் வெளியிடப்பட்டது.எனினும், எதிர்க்கட்சியில் ஏற்பட்ட பிளவுகள், வடகொரியாவின் அணுசக்தி, ஏவுகணைச் சோதனைகள் காரணமாக எழுந்துள்ள அச்ச நிலைமை ஆகியன காரணமாக, அபே மீதான ஆதரவு அதிகரித்துள்ளது.இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தைக் கலைக்கவுள்ள பிரதமர் அபே, அதன் மூலம் தனது நிலையைத் திடப்படுத்திக் கொள்ள எதிர்பார்த்துள்ளார். நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலம் நிறைவடைவதற்கு, இன்னும் ஓராண்டுக்கும் மேலான காலம் இருக்கும் நிலையிலேயே , இந்தத் தேர்தலுக்கான அழைப்பைப் , பிரதமர் அபே விடுக்கவுள்ளார்.தேர்தல், அநேகமாக ஒக்ரோபர் 22ஆம் திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# அணு ஆயுதங்களை பதுக்கிய பாகிஸ்தான்



அணு ஆயுதங்களைப் பாகிஸ்தான், 9 இரகசிய இடங்களில் பதுக்கி வைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவுக்குப் பதிலடி கொடுப்பதற்காகச் சிறிய தூர இலக்கைத் தாக்கும் ஏவுகணை தயாரிக்கப்பட்டு இருப்பதாகப் பாகிஸ்தான் பிரதமர் கூறினார். அதுமட்டுமின்றி நாங்கள் அணு ஆயுத வல்லமை கொண்ட நாடு என்று கூறி, இந்தியாவை மிரட்டி வந்த நிலையில் அந்த நாட்டில் உள்ள அணு ஆயுத இரகசிய மையங்கள் குறித்த தகவல்களை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.அதில், பாகிஸ்தான் தனது ஆயுதக் கிடங்குகளை விரிவுபடுத்தி வருவதாகவும், பாகிஸ்தானில் உள்ள 9 இடங்களில் அணு ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டு இருப்பதாகவும், 130 முதல் 140 வரையிலான அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும், ஏவுகணைகள், ராக்கெட்டுகள், டார்பிடோக்கள் போன்றவை அந்த நாட்டிடம் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.மேலும் செயற்கைக்கோள் புகைப்படங்கள், நிபுணர்களின் ஆய்வுகள், உள்ளூர் செய்தித்தாள்கள் வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இந்த இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (உ)

## தெருக்களைச் சுத்தமாக்கும் சச்சின்



பிரதமர் மோடி பதவியேற்றதும் முதன் முறையாகத் தூய்மை இந்தியா திட்டத்தைக் கொண்டு வந்தார். நாட்டில் உள்ள பிரபலங்கள் இந்தத் திட்டத்தின் தூதுவர்களாக நியமிக்கப்பட்டனர். பின்னர், சமீபத்தில் மக்கள் அனைவரும் தூய்மைப் பணியில் ஈடுபட வேண்டும் என்பதற்காக தூய்மையே சேவை என்ற பிரசார இயக்கம் தொடங்கப்பட்டது. இதிலே , மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசியல், சினிமா, விளையாட்டுப் பிரபலங்கள் சாலைகளில் உள்ள குப்பைகளை கூட்டி, சுத்தம் செய்து வருகின்றார்கள்.அந்த வரிசையிலே முன்னாள் கிரிக்கெட் வீரரும், மாநிலங்களவை உறுப்பினருமான சச்சின் டெண்டுல்கர் மும்பை பந்த்ரா நகரில்உள்ள தெருக்களை இன்று காலை கூட்டிச் சுத்தம் செய்தார்.அவருடன் ஏராளமான பொதுமக்களும் குப்பைகளைக் கூட்டிச் சுத்தம் செய்தனர். “இந்தியாவை சுத்தமாக வைத்திருக்க நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்க வேண்டும். அதனால், உங்களது நண்பர்களுடன்ஒன்று சேர்ந்து சுத்தப்படுத்துங்கள்” என்று சச்சின் கூறியுள்ளார்.

## பாம்பின் காதலன் சடலமாக மீட்பு



பிரித்தானியாவில் செல்லமாகப் பாம்புகளை வளர்த்து வந்தவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பிரித்தானியாவின் ஹாம்சயர் பகுதியைச் சேர்ந்தவர் டான் பிறான்டன் (வயது -31) ஆவார். இவருக்குப் பாம்புகள் என்றால் அலாதி பிரியம், தன்னுடைய வீட்டில் மலைப் பாம்புகளை வளர்த்து வந்தார்.அவைகளுடன் ஜாலியாக விளையாடுவதும் , பேஸ்புக் பக்கத்தில் புகைப்படங்களை வெளியிடுவதுமே அவரது பொழுதுபோக்காகும். இந்த நிலையில் அவரது வீட்டில் படுகாயமடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவருக்கு அருகே பாம்பு ஒன்றும் இருந்துள்ளது , தனக்கு பசி எடுத்த போது உணவுக்காக அவரைக் கொத்தி கொன்றிருக்குமா? என்ற நோக்கில் பொலிஸார் விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.மேலும் பிரேத பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்னரே தெளிவான முடிவு கிடைக்கும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## லண்டனில் நில நடுக்கம்

லண்டனின் பப்புவா நியூ கினியா தீவில் இன்று அதிகாலை 6.0 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. பிரிட்டன் நாட்டுக்குச் சொந்தமான பி.எம்.ஜி. தீவில் இன்று அதிகாலை திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் கடலுக்கு அடியில் 5.7 கிலோ மீற்றர் தொலைவில் சுமார் 6.0 ரிக்டர் அளவுகோலாகப் பதிவானது என அமெரிக்கப் புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்டதன் காரணமாக சுனாமி எச்சரிக்கை ஏதும் அறிவிக்கப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
தீவு நாடான பப்புவா நியூ கினியாவில் கடந்த 1998 ஆம் ஆண்டு கடலுக்கு அடியில் அடுத்தடுத்து உண்டான 7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் காரணமாக மூன்று முறை சுனாமி ஏற்பட்டு, சுமார் 2,100 பேர் பலியானது குறிப்பிடத்தக்கதாகும்.

## சீனாவில் தீ 11 பேர் பலி!

சீனாவின் கிழக்குப் பகுதியிலுள்ள நகரமொன்றில், நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக, குறைந்தது 11 பேர் பலியாகினர். இரண்டு வீடுகள் தீப்பிடித்து எரிந்தே, இந்த அனர்த்தம் ஏற்பட்டது. ஷெஜியாங் மாகாணத்திலுள்ள தைஸோ நகரத்தில், நள்ளிரவு நேரத்துக்குப் பின்னர் தீ ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களைத் தவிர, மேலும் இருவர், வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டனர். மேலும் 10 பேர், சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.
தீ ஏற்பட்ட சிறிது நேரத்திலேயே, அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது எனத் தெரிவித்த பொலிஸார், தீ ஏற்பட்டமைக்கான காரணங்கள் குறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

# 8ஆவது உலக அதிசயம்

நியுசிலாந்தில் மவுண்ட் தரவேரா எனும் எரிமலை 8 ஆவது உலக அதிசயமாக விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.இந்த உலக அதிசயம் மற்றைய 7 அதிசயங்களைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.பழங்கால உலகின் ஏழு உலக அதிசயங்கள் மனிதரால் கட்டப்பட்ட அமைப்புக்களாகும். சீனப் பெருஞ்சுவர், எகிப்து பிரமிட்டுக்கள், ஈபிஸ்டவர் மற்றும் தாஜ் மஹால் போன்றவை நாம் அறிந்த பெரும்பாலான அதிசயங்களில் சிலவாகும். இதைத் தொடர்ந்து 2006ஆம் ஆண்டு புதிய அதிசயங்கள் அறிவிக்கப்பட்டன. இந்த நிலையில், உலகின் எட்டாவது அதிசயமாக நியுசிலாந்திலுள்ள மவுண்ட் தரவேரா எனும் எரிமலை அறிவிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த எரிமலையின் செயற்பாடு காரணமாக அந்தப் பகுதியில் உள்ள ரோட் டோமஹானா ஏரி ,சேறு மற்றும் சாம்பல் சேர்ந்தது போன்று மென் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத் தோற்றத்தில் காட்சியளிக்கிறது. இது சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளதாகவும், இந்த தோற்ற அமைப்பு சுமார் 130 வருடங்களுக்கு முன்னர் உருவாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால், இந்தப் பகுதியை நியுசிலாந்து அரசு இதுவரைக்கும் பாதுகாப்பற்ற இடமாக அறிவிக்கவில்லை.இந்த நிலையில் விரைவில் இந்த இடத்தினை உலகின் 8 ஆவது அதிசயமாக அறிவிக்கத் திட்டமிட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. (உ)





# சாஹிராவைப் பந்தாடியது புனித பத்திரிசியார்



யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில், கொழும்பு சாஹிராக் கல்லூரியை, வீழ்த்தி வெற்றி பெற்றது யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.

நேற்று மாலை நடைபெற்ற இந்தபப பரபரப்பான ஆட்டத்தில் இரு அணிகளும் போட்டி போட்டுக் கொண்டு மல்லுக்கட்டின.

எனினும், இறுதியில் தனது சொந்த மைதானத்தில் ஆதிக்கத்தை மேலோங்க வைத்த புனித பத்திரிசியார், 2:1 என்ற கோல் கணக்கில் சஹிரா கல்லூரியை வீழ்த்தி வெற்றியைத் தன்வசப்படுத்தியது. (ஐ)



# நடிப்புக்கு முழுக்கு

அண்மைக் காலமாகத் தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ள பரபரப்புக்கு மத்தியில் நடிகர் கமல்ஹாசன், தான் சினிமாப் படங்களில் நடிப்பதை நிறுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

தீவிர அரசியலில் ஈடுபடவிருக்கும் அவர், ஊடக சந்திப்பொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"இந்த வருட இறுதிக்குள் கட்சி ஒன்று உருவாகும். அதற்கான வேலைகள் தீவிரமாக நடக்கின்றன. தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுச் சட்ட ரீதியாகப் பொறுப்பேற்கும் சூழல் உருவாகும் பட்சத்தில், சினிமாவில் நடிப்பதை நிறுத்துவேன்.

"அரசியல் ரீதியாக பா.ஜ.க.வின் செயற்பாடுகளில் மனக்கசப்பு இருந்தாலும், தமிழகத்துக்குத் தேவைப்படும் பட்சத்தில் அவர்களுடன் கைகோர்க்கவும் தயாராகவே உள்ளேன்.

"நான் அரசியலில் ஈடுபடும் முடிவு உணர்ச்சி வசப்பட்டு எடுக்கப்பட்ட ஒன்றல்ல. நன்றாக யோசித்து, நிதானமாக எடுக்கப்பட்ட முடிவு" என்றார். (ஓ)

# அச்சுறுத்திய மன்னார் ஐக்கியத்தை சாய்த்தது றோயல்

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடத்தும் "வடமாகாண மகுடம்" உதைப்பந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மன்னார் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வென்றது.

அணிக்கு 7 பேர் கொண்ட இந்த உதைப்பந்தாட்டத் தொடரில், இரண்டாவது சுற்றுத் தொடரின் நேற்றைய போட்டியில், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

இரு அணிகளும் போட்டி போட்டுக் கொண்டு கோல்களைப் போட்டு ஒன்றை ஒன்று அச்சுறுத்திக் கொண்டிருந்தன. இருந்தபோதும், றோயல் அணியின் முன்கள வீரர்களின் சிறப்பாக ஆட்டம் அந்த அணியின் வெற்றியை உறுதிசெய்தது. இறுதியாக ஆட்டம் முடியும் போது 5:3 என்ற கோல்கணக்கில் ஊரெழு றோயல் வெற்றிபெற்று, லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

றோயல் அணி சார்பாக எடிசன் 3 கோல்களையும் கஜகோபன் 2 கோல்களையம் போட்டனர். (ஐ)

# செந்தமிழை வீழ்த்தி இறுதிக்குள் றேஞ்சர்ஸ்



சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்குக் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் தெரிவானது.

கொடிகாமம் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டி நேற்று பி.ப 4.30 மணியளவில் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த அரையிறுதி ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

விறுவிறுப்பாக ஆடிய இரு அணிகளும் கோல்களைப் போடுவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டபோதும், அவை முறியடிக்கப்பட்டன.

இதனால் பின்னர் வழங்கப்பட்ட 'பனால்டி' உதையில் 3:0 என்ற கோல் கணக்கில் றேஞ்சர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

ஆட்டநாயகனாக வர்மன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# மணற்காடு: அண்ணா ஸ்ரார், சென். லூட்ஸ் வெற்றி





மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டங்களில், யாழ். அண்ணா ஸ்ரார் மற்றும் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவான மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் யாழ். அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துப் பொற்பதி பீற்றஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தமையால், 'பனால்டி' உதை வழங்கப்பட்டது.

இதில், யாழ் அண்ணா ஸ்ரார் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக யாழ். அண்ணா ஸ்ரார் வீரரான சரண்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்

பின்னர் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் சென். லூட்ஸ் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சென். லூட்ஸ் வீரரான தமிழ்ச்செல்வன் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)

# இன்றைய கருத்தோவியம்




### இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

## புதிய நிர்வாகம் தெரிவு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அதன் பொது சபை ஊடாக ஜனநாயக ரீதியில், புதிய நிர்வாக சபை ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த நிகழ்வு, கொட்டகலை சீ.எல். எப் காரியாலயத்தில் நேற்று தலைவர் முத்து சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் பெயர் விவரங்கள் வருமாறு:

தலைவர்- முத்து சிவலிங்கம், பிரதி தலைவர்- அம்மாசி ராமையா, பொதுச்செயலாளர்- ஆறுமுகன் தொண்டமான், அத்துடன் பிராந்திய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட உபதலைவர்கள்-நுவரெலியா - எம்.ரமேஷ்வரன்,தலவாக்கலை - பி.சக்திவேல், கண்டி - டீ.மதியுகராஜா, மாத்தளை சிவஞானம், பதுளை - செந்தில் தொண்டமான், ஹட்டன் - கணபதி கனகராஜ், இரத்தினபுரி - எஸ்.ராஜமணி, மாரிமுத்து,கணேசமூர்த்தி, ரவீந்திரன், சதாசிவன். தேசிய சபை அமைப்பாளர்களாக பி.ராஜதுரை, சிவராஜா, திருமதி அனுஷியா சிவராஜா, வெள்ளையன் தினேஷ், எஸ்.அருள்சாமி ஆகியோரும், இளைஞர் அணி உதவி செயலாளர்களாக பி.சசிக்குமார், ஆர். பிரசாத் மற்றும் மகளிர் அணி உதவி செயலாளர்களாக கே.செந்தமிழ் செல்வி, பி.சுந்தரம்பால் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ)

## அமைச்சர் துமிந்தவின் கீழ் பணியாற்ற முடியாது

கொழும்பு கொமர்ஷல் பசளை நிறுவனத்தின் தலைவர் துஷித, தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துள்ளார். அவர், தன்னுடைய இராஜினாமா கடிதத்தை நேற்று அனுப்பி வைத்துள்ளார். கமத்தொழில் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் கீழுள்ள நிறுவனங்களில், தொடர்ந்து பணியாற்ற முடியாது என்பதனால், இந்த தீர்மானத்தை எடுத்ததாக, அவர் தெரிவித்துள்ளார். (உ)

## ஜப்பானுக்கான மீன் ஏற்றுமதி அதிகரிப்பு

இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீனின் எடையை அதிகரிப்பதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது. ஜப்பானுக்கு பயணம் செய்துள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று ஜப்பான் வெளிவிவகார இராஜங்க அமைச்சர் மஸஹிஸா சாட்டோவுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போது ஜப்பான் வெளிவிவகார இராஜங்க அமைச்சர் மஸஹிஸா சாட்டோ இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். ஜப்பான் வருடாந்தம் 100 மெற்றிக்தொன் ருனா மீனை இலங்கையிடம் இருந்து கொள்வனவு செய்கிறது. இலங்கை ஏற்றுமதி செய்யும் மீன் தொகையில் 12 சதவீதமானவற்றை ஜப்பான் கொள்வனவு செய்கிறது. விசேடமாக சூரை மீனைப் பயன்படுத்தி ஜப்பானிய மக்களின் பாரம்பரிய உணவான சுசி மற்றும் சசிமி ஆகியவற்றைத் தயாரித்து இலங்கை ஏற்றுமதி செய்கிறது. (உ)

### சப்ரகமுவ மாகாணசபை

## நாளையுடன் நிறைவு

சப்ரகமுவ மாகாணசபையின் ஆளும் தரப்பின் நிர்வாகக் காலம் நாளை நள்ளிரவுடன் நிறைவடைகின்றது. இதனை ஒட்டிய மாகாண சபையின் நிறைவு அமர்வு நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட தற்போதைய ஆளும் தரப்பின் நிர்வாகக் காலம் நாளையுடன் ஐந்து ஆண்டு பூர்த்தியடைகிறது. விசேட அமர்வுகளைத் தவிர சப்ரகமுவ மாகாணசபை 85 அமர்வுகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

### உணவுப் பொருள் இறக்குமதிக்கு

## விரைவில் வருகிறது தடை



அத்தியாவசியமற்ற உடல் ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கும் அனைத்து உணவுப் பொருட்களினதும் இறக்குமதியை நிறுத்துவதற்கு தேசிய பொருளாதார பேரவை ஊடாக நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். களுத்துறை போம்புவல சேவைக்கால பயிற்சி நிறுவனத்தின் விவசாய கண்காட்சியை நேற்றுப் பிற்பகல் ஆரம்பித்து வைக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில், அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் இறக்குமதிக்கு மட்டும் 2500 கோடிக்கு கூடுதலான பணம்செலவிடப்படுவதாகவும் ஆயிரக் கணக்கான ஆண்டு நாட்டின் பண்பாட்டையும் தனித்துவத்தையும் பாதுகாத்து எமக்குத் தேவையான உணவுப் பொருட்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டியது கட்டாயமானதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். உள்நாட்டு விவசாயிகளின் உற்பத்திகளுக்கு சிறந்த விலையை வழங்கி அவர்களது பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டுமாயின் எமது பொருட்களுக்கு கூடுதல் பெறுமானம் வழங்க வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார். (உ)

## "பண்டா"வின் சிரார்த்த தினம்



முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்காவின் 58 ஆவது சிரார்த்த தின வைபவம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது. நிட்டம்புவ ஹொரகொல்ல சமாதிக்கு அருகில் இன்று காலை 8மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதேவேளை, அமரர் எஸ்டபிள்யு ஆர்.டி.பண்டாரநாயக்கவின் நினைவு தினத்தை முன்னிட்டு ஹொரணை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளது.(உ)

### வாழைக்குலைத்


## திருடனை கடித்துக் குதறியது நாய்

திருகோணமலை வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழைக்குலைகளைத் திருட முயற்சித்த ஒருவரை நாய் கடித்துக் குதறியதில் பலத்த காயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர். வான்எல, ஆயிலியடிப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரே நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளார்.குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு வாழைத் தோட்டமொன்றில் வாழைக்குலைகளைத் திருடுவதற்கு முயன்ற வேளையில், நாய் கடித்துக் குதறியதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## பெரும்போகம் ஆரம்பம்

பெரும்போக உற்பத்தி நடவடிக்கை அடுத்த மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. மறுநாள் 6ஆம் திகதி புத்தரிசி பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இதுதொடர்பாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரோஹண விஜேகோன் தெரிவிக்கையில், பெரும்போகத்தில் 8 இலட்சம் ஹெக்டெயர் நிலப்பரப்பில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்துக் காணிகளிலும் உற்பத்தியை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார். இதற்கு ஏனைய அமைச்சுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என்றார். (உ)

## டிஜிற்றல் பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை



நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு டிஜிற்றல் பொருளாதாரத்தை முன்னெடுக்கப்படுவதன் அவசியத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் முதல் தடவையாக வை-பை பனல் கருவிகளை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றைய தினம் காலிமுகத்திடலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார். இதற்காக நாடு முழுவதிலும் வை-பை வலயங்களை ஸ்தாபிக்கப் போவதாகவும் பிரதமர் அங்கு மேலும் தெரிவித்தார். தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும் உரையாற்றுகையில் பாடசாலைகளிலும் பிரத்தியேக வை-பை வலைப்பின்னல்களை உருவாக்கி மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று கூறினார். (உ)

## நாளை நாளும் கோளும்

27.09.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 11 ஆம் நாள்

சப்தமி மாலை 06.35 வரை | கேட்டை மு.ப. 10.29 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 12.02 - 01.32 | சுபநேரம் 04.32 - 06.02 | எமகண்டம் 07.32 - 09.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜெயம் | ஏமாற்றம் | வருத்தம் | சாந்தம் | ஆதாயம் | நிறைவு | வரம் | சுகம் | அமைதி | கவனம் | போட்டி | நன்மை |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



## 1987.09.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் லெப்டினன் கேணல் திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணாஎநோன்பு இருந்து உயிர் துறந்தார்.

### தேர்தல் பணியாளர்கள்

# விபரம் திரட்டப்படுகிறது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு, அரச ஊழியர்களைத் தேர்தல் பணியாளர்களாக நியமிப்பதற்கான தகவல்களைத் தேர்தல் ஆணைக்குழு, சகல அரச நிறுவனங்களிடமிருந்தும் திரட்டி வருகின்றது. இதற்கான தனியான தகவல் திரட்டும் படிவங்கள், சகல அரச அதிகாரிகளுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், தேர்தல் ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சித் தேர்தல் வாக்குகள், அந்தந்த வாக்குச் சாவடிகளிலேயே எண்ணப்படவுள்ளதால், வாக்குகள் எண்ணும் கடமைகளுக்காக அறிக்கை செய்ய, இலகுவான வாக்கெடுப்பு நிலையம் பற்றியும் தகவல் கோரப்பட்டுள்ளது. (உ)

## திலீபனுக்காக...



### தமிழர்களின் உரிமைகளை மீட்க

# உலக நாடுகள் உதவ வேண்டும்

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை மீட்டுத்தர உலக நாடுகள் உதவ வேண்டும் என்று, ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தில் இயக்குநர் வ.கவுதமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில், 'இராணுவ இரும்பு பிடிக்குள் அவலப்படும் ஈழத்தமிழர்' என்ற தலைப்பில் இயக்குநர் கவுதமன் நேற்று உரையாற்றினார், கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமையாளர்கள் கூறுகிறார்கள். ஐ.நா. விசாரணை அறிக்கையின்படியே, 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகியுள்ளனர். 2 இலட்சம் தமிழர்களை காணவில்லை. அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டிருப்பார்கள் என்றே நம்பப்படுகிறது. தமிழ் மண்ணை சிங்கள இராணுவம், பொலிஸ், புலனாய்வுத் துறை,துணை இராணுவப் படையினர் ஆகியோர் தங்கள் இரும்புப் பிடிக்குள் வைத்துள்ளனர். அவர்களைப் பார்த்து குழந்தைகளும், பெண்களும் இளைஞர்களும் கலக்கத்திலும் பீதியிலும் உள்ளனர். இராணுவத்தின் பிடியில் இருந்து தமிழர்களுக்கு விடுதலை கிடைக்க தேவையான அனைத்து உதவிகளையும் சர்வதேச சமூகம் செய்ய வேண்டும்.- என்றார். (உ)

## திலீபன் நினைவில் தாயக நிகழ்வுகள்















## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரோஹிங்கியா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு நிறுவனத்திடம் இவர்களை நாடு கடத்தும்படி ஒப்படைக்கப்பட்டனர். ஐ.நா. அகதிகள் காப்பு நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய இவர்கள் கல்கிஸை நகரில் வாடகை வீடொன்றில் தங்கியுள்ள நிலையில் இன்று மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

**தேர்தல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமானது அவற்றை மீறும் வகையிலேயே நிறைவேற்றப்பட்டுள்ளது. அவ்வாறு விதந்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையை மீறிய நடவடிக்கையை அரசு என்ற ரீதியில் அனுமதித்துள்ளமையானது சட்டத்தின் மீதான ஆட்சிக்கு அழுத்தம் கொடுப்பதாக உள்ளது. மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பில் யாரினதும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு செயற்படவேண்டிய அவசியம் சட்டத்தரணிகள் சங்கத்துக்கு இல்லை. பொது மக்கள் பொறுப்பாக கருதி இந்த விடயம் தொடர்பில் நாம் நடவடிக்கைகளை தொடரவுள்ளோம் என்றார். (எ-09)

**தியாக தீபம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கலந்துகொண்டு திலீபனுக்கு வணக்கம் செலுத்தினர். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த 2004ஆம் ஆண்டு காலத்துக்குப் பின்னர், தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டமை இதுவே முதல்முறையாகும். இதேவேளையில் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் திலீபனின் நினைவுநாள் நிகழ்வு இன்று அனுஷ்டிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். (எ)

**இந்திய...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விமானப்படை, கடற்படைத் தளபதிகளையும் இந்திய அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இந்தியப் படை அதிகாரிகள் பத்தரமுல்லையில் உள்ள இந்திய அமைதிப்படையினருக்கான நினைவுத் துபியில் அஞ்சலி செலுத்தினர். இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இந்தியப் படை அதிகாரிகள் குழு கொழும்பு வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

**சிறுவனின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றார். தாக்குதலுக்குள்ளான சிறுவன் 7 வயதுடையவராவார். தவறு ஒன்று செய்ததாகக் கூறி சிறுவனை தாயின் இரண்டாவது கணவன் என கூறப்படும் நபரினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இதன்போது சிறுவனின் தாயாரும் இதனைத் தடுக்காது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து சிறுவனின் தாயாரும் சிறிய தந்தையும் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

**திலீபனுக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணா நோன்பிருந்து உயிரீந்த தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் இன்றாகும். அவர் உயிர் பிரிந்த இன்றைய நாளை உலகத் தமிழர்கள் அனைவரும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்து வருகின்றனர்.

இந் நிலையிலேயே தமிழரின் பண்பாட்டுப் அம்சங்களில் ஒன்றான காவடி எடுத்தல் நிகழ்வை தாயகப் பற்றாளர் ஒருவர் மேற்கொண்டிருந்தார். (எ)

**வித்யா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 27 ஆம் திகதி அறிவிக்கப்படுமென நீதிபதிகள் குழு குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் நாளை வழங்கப்படவுள்ள தீர்ப்பு பெரும் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது. வித்யா படுகொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் முதலாம் மற்றும் 9ஆம் எதிரிகள் தவிர்ந்த ஏனையோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகியிருப்பதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் குமார் ரட்ணம் தனது தொகுப்புரையில் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்யா எனும் 18 வயது பாடசாலை மாணவி 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி குழுவொன்றினால் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.